



# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லாஇலாஹ இல்லல்லாஃ
முஹம்மதுறஸூலுல்லாஃ"

புத். **1.** { அறப் ஹு 1312 சபர் மீ 1 உ ச. கி. / இங்கிலிஷ் ஹு 1894 ஆவணி மீ 4 உ ச. கி. } இல. **12.**


## இமாம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஃ அவர்கள் சரித்திரம்.

[சென்ற 11 மிலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி.]

சர்க்குரு நாயகம் ஸெய்யிதினா அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஃ அவர்களின் உஸ்தாது ஸெய்யிதினா குத்பு அப்துஸ்ஸலாம் இப்னு மஷீஷ் றளியல்லாஹு அன்ஹு அவர்கள் அடங்கப் பட்டிருக்கும் ஸ்தலத்தில் அற்புதங்களும் நூதன காரணங்களும் மிஸ்றில் அடங்கியிருக்கும் குறைஷிக் குலத்தி லுதித்த சந்திரனாகிய இமாம் சாபியீ றஹ்மஹுல்லாஃவின் ஸ்தல காரணீகத்தைப் போலிருக்கின்றதாய்க் கூறுகின்றார்கள். இவர்களுடைய கோத்திரமும் மவ்லாய இட்றீஸ் ஆண்டவர்களுடைய வம்மிசத்தைச் சார்ந்ததே. மகுறிபு ராச்சியத்திலுள்ள ஸெய்யிது மார்களில் அனேகர்களெல்லாம் இவர்கள் கோத்திரத்தை சேர்ந்தவர்களாயிருக்கின்றார்கள். சாதுலிய்யாதரீக்கில் தீட்சைபெற்ற சிஷ்யர்கள் "இக்று" செய்யு முன்னர் ஓதிவரும் ஸலவாத்தானது இந்த அப்

துஸ்ஸலாம் நாயகம் அவர்கள் கோர்வை செய்ததுவே, அதற்கு "வளீபா" என்றும், "ஸலாதுல் மசீசிய்யா" வென்றும் பேர் சொல்லப்படும். அதனை சகல இமாம்கள், அவ்லியாக்கள், முதலிய மகாத்துமாக்களும் ஓதிவந்திருக்கின்றார்கள். நாளது வரையிலும் பூலோகத்திலுள்ள ஓதுவோர்களெல்லாம் "தலாயிலுல்கைறாத்" தை ஓதிவருவதுபோலவே மசீசிய்யாவையும் ஓர் விர்தாக ஓதிவருகின்றார்கள். இதற்கு சறகு என்னும் விரிந்துரைகள் உண்டாகியிருப்பதோடு ஷெய்யிதுல் பக்றி றஹ்மதுல்லாஹி அவர்கள் மாத்திரம் மூன்று சறகுகளுண்டாக்கியிருக்கின்றார்கள். இந்த நாயகத்தாலுண்டாக்கப்பட்ட ஓதல்கள் பிரபந்தங்களின் சங்கதிகளும் அவர்களின் சரிதங்கதிகளும் அதிக விரிவாக இருக்கின்றன. அவைகளை நாம் இங்கே கூறுகிறதாயிருந்தால் சரித்திரம் விசாலப்படும். ஆகையால், இது சங்கதியை இம்மட்டில் நிறுத்தி குத்பு நாயகம் சாதலி றஹ்மதுல்லாஹி அவர்களின் விவரணத்தை விவரிப்போம்.

எங்கள் குத்பு நாயகம் சாதலி றஹ்மதுல்லாஹி அவர்கள், தங்கள் குருவினிடத்தில் குரு உபதேசம் பெற்றுக்கொண்டு தூனிஸ் என்னும் பட்டணத்தளவில் பிறப்பட்டார்கள். பிறப்பட்டு அந்தப்பட்டணத்திற்கு வந்தபோது நடந்த விருத்தாந்தங்களை "மபாகிறுல் உலிய்யா" என்னும் கிதாபில் கூறுகிறதாவது:—சாதலி இமாம் சொல்லுகிறார்கள்—நான் சிறிய வாலிபனாயிருக்குங்கால், தூனிஸ் என்னும் பட்டணத்திற்கு சென்றபோது, அங்கே பஞ்சம் பரந்திருந்ததால் அநேகர் பட்டணி கிடக்கக்கண்டேன். கடைத்தெரு வீதிகளெல்லாம் மனிதர்கள் பசியினால் மரணமடைந்து கிடக்கிறார்கள். அப்போது நான் இந்தப் பசியாளிகளுக்கு ரொட்டி வாங்கிக் கொடுக்கக் காசிருக்குமானால் வாங்கிக்கொடுத்து அவர்களின் பசியைத் தணிப்பேனே என்று என்னுக்குள்ளே மனசால் எண்ணிக்கொண்டேன். என் எண்ணம் முடிவாகுமுன்னர், "உம்முடைய சட்டைச்சேப்பிலிருக்கும் பணத்தை எடுத்துச் செலவு செய்யும்" என்று அசரீர வாக்காய் ஓர் சத்தங் கேட்டேன். உடனே என் சட்டைச் சேப்பைச் சுறுக்கில் பார்க்கவே, அதில் சில வெள்ளிக் காசுக ளிருக்கக்கண்டு அதை யெடுத்துக்கொண்டு பாபுல் மனாறா என்னுமிடத்திலிருக்கிற உரொட்டிக்காரனிடம்போய் அவனிடத்திலிருந்த சகல உரொட்டிகளையும் எவ்வளவு என்றெண்ணி உள்ளதையெல்லாம் எடுத்துப் பசியாளிகளுக்குப்பங்குவைத்துக்கொடுத்தேன். அவர்கள் அவைகளை யெடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். நான் உரொட்டிக் கடைக்காரனுக்கு என்னிடமிருந்த காசைக் கொடுத்தேன். அவன் அவற்றைப் பார்த்துவிட்டு இவை வளங்காத காசுகள், நீங்கள் மகுறிபு தேசவாசிகளாயிருப்பதால் (கீமியா) இரசவாதத் தொழில் தெரிந்தவர்களாயிருப்பீர்கள், ஆகையால் நீங்கள் செய்த செல்லாக் காசாயிருக்

கிறது நமக்கு வேண்டாமென்றான். அப்போது நான் என் வஸ்திரமாகிய "பர்னுஸி" என்றும் "குர்ஸாஷி" என்றும் சொல்லுகின்ற மேலான உடுப்புகளை உரொட்டியின் விலைக்கு ஈடாக வைத்துவிட்டு, அவ்விடத்தால் வெளிக்கிட்டு "மஹ்ரூஸ்" என்னும் தானத்துக்கு நேரில் வந்தேன், அந்த வீதி வாசலில் ஒரு மனிதனார் நின்றார். அவர் என்னைப்பார்த்து ஓய் அலியே! நீர் உரொட்டிக் கடைக்காரனுக்குக் கொடுத்த காசெங்கே என்று வினவி, அந்தக் காசுகள் அவர் கையிலிருக்கிறதாகக் குலுக்கிக் காட்டிவிட்டு அந்தக் காசுகளை உரொட்டிக் காரனுக்குத் திரும்பக்கொடும், அவை வழங்கும் நாணயம் என்று சொல்லித் தந்தார், நான் அவைகளை வாங்கிக் கொண்டு பெயர்ந்தும் உரொட்டிக் காரனிடம்போய்க் கொடுத்தேன். அவன் அவைகள் நல்ல நாணயங்களாயிருந்ததால் வாங்கிக்கொண்டு என்னுடைய உடுப்புகளைக் கொடுத்துவிட்டான். நான் அவைகளைப் பெற்றுக் கொண்டு என்னோடு பேசிக் காசு நல்ல காசென்று சொல்லித் தந்த பெரியவரைத் தேடினேன் காணவில்லை.

இன்னும் வரும்.

## மெய்ஞ்ஞான விளக்கம்.

சர்வ வல்லமையுடைய அல்லாஹுத்தஆலாவின் திரு வசனமாகிய குர்ஆன் ஷரீபும், நபிகள் நாயகம் அவர்களுடைய திருவாக்கிய ஹதீதும் இவ்வுலகத்திலுள்ள சர்வ ஞானங்களையும் பொதிந்திருக்கிறது. அவற்றை மிசரப்பட்ட ஞானம் ஒன்றுங் கிடையாது. குர்ஆனும் ஹதீதுமே முஸ்லிம்களின் வழி சறுகாமல் காப்பாற்றிக்கொண்டிருக்கும் மெய்ஞ்ஞான போதகமாயிருக்கிறது. இந்தப்போதகத்தை மீறி நடப்பவன் வழி சறுகிவிடுவான் என்பது வாஸ்தவம். குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் ஒவ்வாத சில வழி பிசகியவர்களுடைய வாக்கியங்கள் நச்சுக் காற்றுப் பரந்து சீவனுக்கு மோசத்தை வருவிப்பதுபோல, மனிதர்களின் நல் விசுவாசத்தைக் கெடுக்கிறவைகளாயிருக்கின்றன. அப்படித் தப்பான வாக்கியங்களை விசுவாசித் திருப்பவர்களில் அனேகர் தங்கள் நிலை இன்னதென்றறியாமல் ஸுன்னத்து ஜமாஅத்துக் கூட்டத்திற்றானிருக்கிறோமென்று எண்ணி மதிமோசப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் ஸுன்னத்து ஜமாஅத்துகளல்லாத, எழுபத்திரண்டு வழி சறுகிய கூட்டங்களிற் சேர்ந்தவர்களாயிருக்கின்றார்கள். குர்ஆனுடைய சில பரிசுத்த வசனங்களுக்கு ஒவ்வாத பொருட்களைத் தங்கள் மனப்பிரியப்படி வைத்துக்கொண்டு வழி சறுகியதுபோல "முல்ஹிதீன் - ஸிந்திக் - முசுத்த ஸலியா - கதரியா - ஜபரியா" முதலிய வழிகெட்ட கூட்டத்தவர்களின் வாக்கியங்கள் இந்தியா - இலங்கைமுதலிய தேசங்களில் பரந்து அனேகருடைய (ஈமான்) விசுவாசத்தை மோசஞ் செய்திருக்கின்றன. அப்படிப்பட்ட கெட்ட எண்ணங்களையுடையவர்களைத் திருத்த வேண்டி

யது அறிவாளிகளாகிய உலமாக்களுக்குக் கடமையாயிருக்கின்றது. முஸ்லிம்களின் ஈமானை நல்வழியில் திருப்பி வைக்கப் பிரயாசை யெடுத்து, அவர்களின் பொய் ஞானத்தைக் கண்டித்து மெய் ஞானத்தை நிலை நிறுத்தும்படி உபதேசிப்போராகிய உலமாக்கள் மிகச் சிலர் எனச் சொல்லலாம் ஒருவனிடத்தில் பணமிருந்தால் அந்தப்பணத்தின்பேரில் ஆசை வைத்து நாம் ஏழையாயிருக்கின்றோம், அவரின் அன்பைப் பெற்றிருப்போமானால் ஒரு வேலைக் கேதுமோர் உதவி பெறலாம் என்று மனதில் கருதி தான் படித்த கல்வியை வெளிக்கிடாது கழுக்கட்டில் வைத்துக்கொண்டு, பணமுடையவன் எப்படிப்பட்ட அஞ்ஞான முடையவனாயிருந்தாலும், அவனுக்கு நல்லறிவைப் புகட்டி அவனுடைய விசுவாசத்தைக் குணப்படுத்தாது முகஸ்துதி என்னும் போர்வைக்குட்பிரவேசிக்கும் உலமாக்கள் அனேகரை நாம் கண்டிருக்கின்றோம். இந்தியாவல்வரும் உலமாக்களிற் சிலரைத் தவிர அனேகரெல்லாம், தங்களுடைய கல்வியை பணத்தை வளைத்துப் பிடிக்கிற ஒரு வலைபோல பிரயோகித்து ஏழை மதியினரிட மிருக்கும் பொருட்களை அபகரித்துக்கொண்டு தங்கள் நாடு சேர்கின்றார்கள். இந்தியாவில் தஞ்சையைச் சார்ந்த வலுத்தூர் என்னுமிடத்திலிருந்து சிலரும் நாகர் கோயிலைச் சேர்ந்த கோட்டாற்றிலிருந்து பலரும் இந்தக் கொழும்புக்கு நெடுங் குப்பாயத்தைப் போட்டுக்கொண்டு "செய்கு" என்னுமோர் பேரையும் வைத்துக்கொண்டு வந்து, பலவிதமான "திக்று" - அவ்றாது - கலிமா முதலிய அறபு வாக்கியங்களைக் கற்றுக்கொடுத்து இது "ஸிர்ரு" ஒருத்தருக்குஞ் சொல்லாதே, அறபிகளிடத்தில் இதுகளைக் கேட்டறியக்கூடாது, நாங்கள் எங்கள் முரீதீன்களுக்கு "குன்ஹூ தாத்" தை அறியக்கூடிய விதங்களை அறிவிப்போம் என்று சொல்லிக்கொடுத்து எவ்வளவோ பெயர்களின் ஈமானைக் கெடுத்திருப்பதைப் பார்க்கும்போதும், கேட்கும்போதும், நினைக்கும்போதும், மிகவும் விசனமடைகிறோம். நாம் அறிந்த சில சன்மார்க்க சற்குணரான மனிதர்களிற் சிலர் இவ்விதமான அஞ்ஞானக் குருக்களின் குருட்டு வசனங்களால் ஏமாற்றப்பட்டு பலனற்ற மொழிகளை இக்று என்று உச்சரித்துக்கொண்டு தங்கள் வாணாளை வீணாய்ப் போக்கின்றார்கள். அவர்கள் தானும் இது சரியோ பிசகோ வென்று ஐயமறத் தெளிந்து பார்க்கின்றார்களில்லை. நாம் இப்படிச் சொல்லுவது சிலருடைய மனமென்னும் மலரை வாட்டவுங் கூடும். சினேகிதர்களே! கருமம் அப்படியல்ல. நாம் சொல்லுவதை உலமாக்களிடம் ஆராய்ந்து பிசகிருந்தால் எமக்கு நேரே யெழுதினால் நாம் அதைத் துதியோ டங்கீகரித்து உங்களுக்கு நியாயங்கூறுவோம். நாம் இவ்விஷயத்தில் தலையிட்டது ஒருவரோடு கொண்டவைக்கிராததினால் வாதாட வேண்டுமெனக் கருதியல்ல என்பதையும் ஒருவனுக்கு இவ்வுலகமுழுதும் அதிலுள்ள சகல சம்பத்துகளுங் கி

டைத்திருந்து குபேரனைப்போத்து வாழ்ந்தாலும் அவனுடைய ஈமான் மோசமாகியிருந்தால் அவனைவிட நஷ்டமடைந்த ஒருவன் இல்லை என்றும் நாயனால் கொடுக்கப்பட்ட பாக்கியங்கள் யாவிலும் நல் ஈமானே மீசுரப்பட்டது என்றுஞ் சொல்லப்படுவதாலுமே எம்மித்திரர்களின் விசுவாசத்தைவிரும்பியே எமதுகடமையை வெளிக்கிட்டோம். தருணம் வாய்க்கப் பின்னும் சிலவற்றை வெளியாக்குவோம்.

## ஆதி அறிவினர் அறபியர்.

தற்காலத்தில் அசியா ஆபிரிக்கா முதலிய கண்டங்களில் வசிப்பவர்களைப்பார்க்க, ஐரோப்பியர் கல்வியிலுஞ் சீர்திருத்தத்திலும் எவ்வளவு கீர்த்தி பெற்றிருக்கின்றார்களோ, அங்ஙனமே முற்காலத்தில் சகல சாதிகளிலும் அறபிகளே கீர்த்திப்பெற்றிருந்தார்கள். அவர்களின் கல்வி அறிவு என்னுஞ் சூரியனானது உலகமெங்கும் போல் பிரகாசித்திருந்தகாலத்தில், அவர்கள் ஒரு தேசத்தைப் பிடித்தார்களானால், அந்தத் தேசத்தில் வளங்கிய பாஷையிலுள்ள நூல்களைத் தங்கள் சொந்தப்பாஷையில் மொழி பெயர்த்து, அதிலுள்ள அரிய அறிவுகளைத் தெரிந்தெடுத்துத் தங்கள் கல்விகளோடு யாவர்க்கும் உபயோகப் படும்படி பரத்துவதே அவர்களின் சிரேட்ட விஷயமாம். கல்வி அபிவிருத்தியின் காரியத்தினால் சகல சாதிகளும் மேன்மை பாராட்டி வந்தார்கள் எங்கள் இரட்சக நாயகர் அவர்களின் காலத்தின் பிறகு, கலிபாக்களுக்கு இராஜாங்கஞ் செய்வதற்கானது. அந்த கலீபாக்களின் காலத்தில் கல்வி அதிகப்பட்டே வந்தது. ஆனால் கலீபாக்களில் அப்பாஸிய்யா வம்சத்தவர்களின் காலத்திலே கல்வி அதிமீசுரமாய் வளர்ந்ததென்று சொல்லப்படுகிறது. கல்வி விஷயத்தில் எடுத்த முயற்சியினால் அல்மன்ஸூர், ஹாறூன் றசீது, அல்மஃமூன் என்கிறசக்கிரவர்த்திகளாகிய சுல்த்தான்களின் நாமங்கள் பலசாதி அரசர்முதல் வித்துவான்களுக்கிடையில் மங்காது எக்காலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. அல்மன்ஸூர் என்னும் சுல்த்தான் என்பவர், யூனானி - ஸுரியானி ஆகிய பாஷைகளிலிருந்த பல கல்வி சாஸ்திரங்களையும் பக்திஸ் என்னும் பேரையுடைய இன்ஜில் வேதானுசார வைத்திய பண்டிதனால் அறபுப் பாஷையில் மொழி பெயர்க்கச் செய்தார். மொழி பெயர்த்து தன்மட்டில் வைத்துக்கொண்டாரில்லை, பரோபகாரங் கருதி படிப்பித்துங் கொடுக்க ஆக்கியாபித் தங்ஙனஞ் செய்தார். இந்த சுல்த்தான் அவர்கள் சங்கதி அங்ஙனமாக, சுல்த்தான் ஹாறூன் றசீது அவர்கள் தங்கள் ஆளுகை காலத்தில் சில கிறிஸ்தவ பண்டிதர்களைத் தருவித்து தங்கள் ராஜ வித்துவ சபையில் உத்தியோகங் கொடுத்து முன்னுள்ள அப்ருனி சுரியானி முதலிய பாஷைகளிலுள்ள பல புத்தகங்களை அறபுப் பாஷையில் மொழி பெயர்க்கச் செய்

தார்கள். அப்லாதூன் என்றும், அரிஸ்தாதாலிஸ் என்றும் பெயர் சொல்லப்பட்ட யூனானி பண்டிதர்களும், வேறு சில பண்டிதர்களும் உண்டாக்கிய உடலறி ஞானம், தத்துவ சாஸ்திரம் வைத்திய சாஸ்திரம், வான சாஸ்திரம், பூமி சாஸ்திரம் முதலிய அநேக புஸ்தகங்கள் எல்லாம் அறபுக்கு மொழி பெயர்த்தார்கள். தீர்க்க தரிசிகள் சரித்திரம் என்னும் "கஸஸுல் அன்பியா" அறபுப் பாஷையில் முற்றாயிருப்பதைக் கண்டறியக்கூடாதிருந்தமையால், ஹிப்று பாஷையிலிருந்ததை சுல்த்தான் ஹாரூன் றஷீது அறபில் திருப்பினார்கள். சுல்த்தான் ஹாரூன் றஷீதுடைய காலத்திலும் சுல்த்தான் மஃமூனுடைய காலத்திலும் பற்பல தேசங்களிலிருந்து கல்விமான்கள் வித்துவான்கள் ஆகிய பண்டிதர்கள் வந்து தங்கள் பாண்டித்தியத்தைக் காட்டியும், அறிவாளிப் படிப்பூட்டியும் வெகுமதிகள் பெற்றுச் செல்வார்கள். அந்தக்காலத்தில் அப்துல் வலீது இப்னு முஹம்மது என்று ஒருவர் இருந்தார். அவர் பல பாஷைகளையும் படித்தறிந்த பண்டிதர். தத்துவ சாஸ்திரத்திலும் வைத்திய சாஸ்திரத்திலும் இவருக்கு ஒப்பாகச் சொல்ல அக்காலத்தில் ஒருவருமிருக்கவில்லை. இவர் [illegible]. இவருடைய தகப்பனார் அந்நாட்டில் மார்க்க நியாயத் தீர்ப்பு கொடுக்கும் "முப்தி" என்னும் பட்டம் பெற்றிருந்தது மாத்திரமல்ல, [illegible]

அநேக கித்தாபுகள் கோர்வை செய்திருக்கின்றார். வைத்திய சாஸ்திரத்திலும் அநேக புத்தகங்கள் கோர்வை செய்திருக்கின்றார். அவர் செய்திருந்த அறபுக் கித்தாபுகளில் மிகுந்தவற்றை, லத்தின் பாஷையிலும் பிரான்ஸ் பாஷையிலும் மொழி பெயர்த்து ஐரோப்பாவில் படித்து வந்தார்கள். அவர் செய்த புத்தகங்கள் அறபு தேசத்தில் அரிதாயினும் ஐரோப்பாவில் சில பல பகுதிகளில் காணலாம். முற்காலத்தில் ஐரோப்பா முதலிய கண்டங்களிலிருந்து, பக்தாது, பஸரா, கூபா முதலிய ஊர்களுக்குச் சென்று படித்துக்கொண்டு போவார்கள். இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் படித்துவருகிற அல்ஜிப்றா என்னுங் கணித சாஸ்திரம் அறபிகளிடத்திலிருந்துதான் இங்கிலீசுக்கு எடுக்கப்பட்டது. அறபில் அல்ஜபரிய்யா என்று சொல்லப்படுகிறது. இப்படியே அறபிகளுடைய கல்வியைப் பல சாதிகளும் படித்துத் தேறிக்கொண்டார்கள். அறபிகளின் கல்வி அறிவுதான் உலகமெங்கும் பரந்து நாளுக்கு நாள் பல சாதிகளுக்கிடையிலும் அபிவிருத்தியடைந்தது என்று ஐயமறக் கூறலாம். இவ்வாறு முற்காலத்தில் அறபிகள் பல பாஷைகளையும் படித்துத் தேறியிருந்ததால் அவர்கள் இந்நாட்கள் வரையிலும் புகழும் கீர்த்தியும் பெற்று வருகின்றார்களென்பதும் இஸ்லாம் மித்திரன் பிரதியைச் சாட்சியாய் [illegible]

## தேகாப்பியாசம்.

இதனாலுண்டாகும் அனுகூலங்கள்.

1 போசனத்தை ஜீரணிக்க உதவுகின்றது. தேகாப்பியாசத்தால் இரைக் குடலிலுள்ள போசனம் ஜீரணித்து ஒரு விதக் கெட்டியான வெண் கூழாகின்றது. இந்தக் கூழ் சிறு குடல்களுட் செல்ல, இங்கே முன்னிலும் வெண்மையான நீராகிறது. இந்நீர் சிறு குழாய்களா லுறிஞ்சப்பட்டு ஹிருதயத்தின் வலது பக்கத்துக்குக் கொண்டுபோகப் படுகிறது; இப்படிக் கொண்டுபோகப் படும்போதே சேஷமாகிய கழிவுப் பதார்த்தம் சிறு குடல்களிலிருந்து பெருங் குடல்கள் வழியாய் வெளியேற்றப்படுகிறது. காளவுதிரமென்று சொல்லப்பட்ட ஓர் வித இரத்தத்தோடு கூடினதாகவே சேர்க்கையான மேற்படி வெண்ணீர்க் கூழ் ஹிருதயத்தின் வலப் புறத்திலிருந்து சுவாசாசயத்துக்கு கொண்டுபோகப்படுகிறது இவ்விடத்தில்தான் அது நாம் சுவாசிக்கிற பிராண வாயுவின் ஏதுகாரணத்தால் சுயரத்தமாக மாற்றவும் சுத்திகரிக்கவும் படுகிறது. இச் சுத்திகரிப்பின் விருத்தியம் நாம் உள் வாங்குகிற பிராண வாயுவின் அளவுக்குத் தக்கதாய்த்தான் இருக்குமென்பதைக் கவனத்தில் வைக்கவேண்டும்; அதோடு நாம் சும்மாயிருக்கும்போதைவிட நாம் தேகாப்பியாசஞ் செய்கையில் அதிக அளவான பிராண வாயுவை உள்வாங்குகிறோம் என்பதையும் மனதிற் பதிக்கவேண்டும். இப்போதும் சுவாசாசயத்தில் சுத்திகரிக்கப்பட்ட இரத்தம் அதிலிருந்து ஹிருதயத்தின் இடது பக்கத்துக்குச் செலுத்தப் படுகிறது அவ்விடத்திலிருந்து அது இரத்த நாளங்களென்ற குழாய்கள் வழியாய் சரீரத்தின் ஒவ்வொரு மூலை முடக்கிலுமுள்ள சகல இந்திரியங்களுக்கும் உச்சி முதல் உள்ளங்கால் பரியந்தமும் பரவுகிறது. இதனால்தானே சரீரம் போஷிக்கப்பட்டும் பலம் பெற்றும் வளர்ச்சியடைந்தும் வருகிறது. இதுவுமன்றி, தேகாப்பியாசத்தினால் அதிகமான பசித்தீபன முண்டாகிறதும் அதினால் நாம் அதிகஞ் சாப்பிடுகிறதும் அதன் மூலமாய் அதிக இரத்தங் கிடைக்கப் பெறுவதும் பெரு நன்மையே.

2. சரீர பலன் அதிகரிக்கிறது. சரீரத்துக்குப் பலமாயிருப்பது தசை நார்களென்று சொல்லப்பட்ட நரம்புகள்தான். ஒரு பிராணியின் தோலையுரித்தமாத்திரத்தில் அதற்கடுத்து தசையை யொட்டி கட்டுக்கட்டாய்ச் சேர்ந்திருக்கிற அழுத்தமும் இறுக்கமுமான நரம்புகளே தசை நார்களெனப்படும். சரீரத்துக்குப் பலமும் வளர்ச்சியுங் கொடுப்பன இவைகளே. சரீரம் அப்பியாசிக்கப் படும்போது இத்தசை நார்கள் அதிகப் பலமும் திடனுமாகின்றன. சும்மாவிருக்கையில் பலகீனப்படுகின்றன. இவ்விஷயம் அதிக உழைப்புடைக்கும் வேலைக்காரர் கைத்தொழிலாளிகளிலும் சும்மா இருக்கும் செல்வர்களிடத்திலும் [illegible]:—

சரீரம் அப்பியாசத்துக் குட்படும்போது தசை நார்கள் இருகச் சேர்ந்து, முறுக்கப்பட்ட நனைந்த வஸ்திரம்போல் கெட்ட நீர் வஸ்துவை தோலின் மயிர்த் துவாரங்கள் வழியாய் வெளியே பிழிந்து விடுகின்றன. வெளியேறின கெட்ட வஸ்துவின் தானத்தில் புது இரத்தம் வந்து நிரம்பி விடுகிறது; அதனால் இன்னும் அதிகமான தசை நரம்புகளுமாவதன்றி தோலிலும் தசை நார்களிலும் அழகிய செந்நிறமு முண்டாகச் செய்கிறது. தேகம் அப்பியாசமற் றிருக்கும்போது தசை நார்களிலிருக்கிற இரத்தம் கிடை தண்ணீர் போலாகி பலவீனப்படுகிறது. கிடை தண்ணீர் வியாதிகளை ஜெனிப்பிக்கிறதுபோல் கிடையுதிரம் தசைகள் பலவீனமும் மெலிவும் வெளிறின நிறமுமடையச்செய்கிறது. இதுடன் தேகாப்பியாசஞ் செய்கிற இன்னொரு அனுகூல மென்னவென்றால், அது உதிரக் குழாய்களை அகலித்து இரத்தவோட்டம் கூடியவரை செகியடைய செய்கிறது. அதனால் இரத்தச் சுழற்சியும் வெயர்த்தலும் அதிகரிக்கின்றன. எலும்புகளுக்கும் அனுகூலமாகின்றன. மனிதர் பாலிதத்திலிருந்தே தேகாப்பியாசஞ்செய்து வரும்போது அவர்களுடைய மெல்லிய எலும்புகள் கெட்டியும் பலனு மடைகின்றன. எலும்புகளி லுண்டாயிருக்கும் தவறான வளைவுகள், நெளிவுகள் கோணல்கள், குறுங்கல்கள் எல்லாம் செவ்வைப்படுகின்றன. வழக்கமாய் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்களுடைய முதுகெலும்பைப் பாருங்கள். இதேப்பிலிருந்து பிடரிமுட்ட எழுபது நெளிவு, வண்டி கொடைச்சாய்ந்தாற்போலிருக்கிறது. பார்ப்பதற்கே அவலட்சணமாய்த் தோன்றுகிறது. தேகாப்பியாசிகளுடைய முதுகைப்பாருங்கள் நடந்தாலும் ஒரு திட்டம், நின்றாலும் ஒரு திட்டம், உட்கார்ந்தாலும் ஒரு திட்டம், வீரவான்கள் போற்றோன்றுகின்றன வல்லவா?

## தியான வந்தனம்.

தியான வந்தனம் என்று சொல்லுவதை நாம் "திக்று" செயகிறது என்போம். இதைப்பற்றிய ஒரு ஆகமத்தைச் சுருக்கமாய்ச் சொல்வோம். இவ்வுலக முடியும் வரைக்கும் சீவித்திருக்கும் இல்யாசு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இஸ்றயீல் அலைஹிஸ்ஸலாம் என்னும் மரண தூதர் வந்து உயிரைப் பிரிக்க உத்தரவு தேடவே, நபி அவர்கள் மிகுதமாகச் சலித்தார்கள். நபியே! நீங்கள் இவ்வுலகைப் பிரிவதைப்பற்றியா அல்லது மரணப் பயத்தினாலேயா சலிக்கிறீர்களென்று மரண தூதர் வினவினர். அல்ல. அல்ல. நான் மரணமடைந்ததின் பிறகு அல்லாஃவை திக்றுசெய்வது தப்பிவிடுமே எனக்குப் பிறகு உயிரோடிருப்பவர்கள் திக்று செய்து பலனடைவார்களே நான் இயலாமலாகிவிடுவேனே என்று சலிக்கிறேன் என்றார்கள். அப்போது அல்லாஹுத்தஆலா கட்டளை அறிவித்ததாவது ஓ! மரண தூதரே! நீர் அவருடைய உயிரை உலகமுடியும் பரியந்தம் வடுக்காதீர், அவர் முடிவு காலவரையில் சீவித்திருந்து என்னை திக்று செய்யட்டும் என்பதுவே. அங்ஙனமே நடத்தப்பட்டது.

அல்லாஃவை திக்று செய்கிறதனால் வாறுல் நீளமாகும் என்பது விளங்குகிறது.